KAALAI KATHIR 06 JUNE 09

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஊர்வலம்

கோபிசெட்டிபாளையம்:

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஈஷா யோகா மையம் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் கலந்து கொண்ட விழிப்புணர்வு ஊர்வலம் கோபியில் நடந்தது.

ஊர்வலத்தை கோபி பி.கே.ஆர்., கல்லூரி முதல்வர் ஜெகதா லட்சுமணன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். ஊர்வலத்தில் சாரதா மேல்நிலைப்பள்ளி, ஸ்ரீ வித்யாலாயா மேல்நிலை பள்ளி, ஆண்டவர் பாலிடெக்னிக், கம்பன் கல்வி நிலையம் மற்றும் பி.கே.ஆர்., மகளிர் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு அடங்கிய அட்டைகள் தூக்கி சென்றனர். கோபி சீதாலட்சுமி திருமண மண்பத்தில் இருந்து துவங்கிய ஊர்வலம் ஜீவா செட், கோபி பஸ் ஸ்டாண்ட், கச்சேரி மேடு வழியாக முத்துமஹாலை அடைந்தது.

ஈஷா யோகா மரம்நடும் திட்ட மாவட்ட அமைப்பாளர் ஜனகரத்தினம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.